பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 141

புதன்கிழமை
16 ஏப்ரல் 2025

சித்திரை 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## தகிக்கும் வெம்மை; தண்ணீர் அவசியம்

விரிவு பக்கம் 5

ரணில் காலத்தில்

# விடுவிக்கப்பட்டதாக அறிவித்த காணிகள் படையினரின் வசமே

- தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்குத் தடை
- மாலைநேரத்துக்கு முன்னரே விரட்டப்படும் மக்கள்
- போக்குவரத்துக்காகத் தொடரும் அலைச்சல்

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 16**

**யாழ்ப்பாணம் வலி.வடக்கில் கடந்த வருடம் மார்ச் மாதம் விவசாய நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட காணிகள், தொடர்ந்தும் படையினரின் இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழேயே காணப்படுவதாகவும், பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

15

## அரச உத்தியோகத்தரைத் தாக்கிய பொலிஸாருக்கு எதிராக விசாரணை

கிளிநொச்சி, ஏப். 16

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றி வரும், சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்

15

## மருதடி இரதோற்சவத்தில் இரு சங்கிலிகள் மாயம்!

யாழ்ப்பாணம், ஏப். 16

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இரதோற்சவத்தில் இரண்டு சங்கிலிகள் காணாமற்போயுள்ளன என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

15

## உடற்பருமன் காரணமாக உயிரை மாய்த்த யுவதி!

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர், உடற்பருமன் காரணமாக தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

29 வயதான அந்த யுவதி, மார்ச் மாதம் 23ஆம் திகதி தவறான முடிவெடுத்து கிருமி

15

## பிள்ளையானுடன் உரையாட ரணில் கடும் பிரயத்தனம்!

விரிவு பக்கம் 2

## குருநகர்ப் பகுதியில் துப்பாக்கி மீட்பு!



யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவுதுப்பாக்கியொன்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே, குருநகர் கடற்கரைப் பகுதியில் இருந்து

15

## மோட்டார்சைக்கிள்கள் மோதி மூன்று பேருக்குப் படுகாயம்!

வவுனியா, ஏப். 16

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேற்று நேருக்குநேர் மோதி விபத்துக்கு உள்ளானதில், இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

பூந்தோட்டம் பாடசாலைத் திசையிலிருந்து

15

## உளவியல் நெருக்கடியில் நகர்ப்புற மாணவர்கள்!

யாழ். போதனாவின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டு

விரிவு பக்கம் 6

## அன்னை பூபதியின் நினைவேந்தலை அரசியலாக்க நடவடிக்கைகள்

உடன் தடுத்துநிறுத்துமாறு மகள் பொலிஸில் முறைப்பாடு

மட்டக்களப்பு, ஏப். 16

வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெற்று, அன்னை பூபதியின் நினைவேந்தலைச் செய்ய முற்படுகின்றனர். நினைவேந்தலை அரசியலாக்கும் இத்தகைய நடவடிக்கையைத்தடுத்து நிறுத்தவேண்டும் என்று அன்னை பூபதியின் மகள் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

தியாகதீபம் அன்னை பூபதியின் 37ஆவது நினைவேந்தல் எதிர்வரும் 19ஆம் திகதி அவரது

15



'இப்பிடித்தான் இவையளின்ர விடுவிப்பு நாடகங்கள் எண்டது சனத்துக்கு விளங்கினாச் சரி கண்டியளோ'

## தவறான முடிவால் குடும்பஸ்தர் ஒருவர் இறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

முல்லைத்தீவு – ஐயங்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

50 வயதுடைய அந்தக் குடும்பத்தலைவர் வீட்டில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரண

15

## துணவி சிவன் ஆலயத்தின் சீரமைப்பு ஜூனில் முழுமை!

யாழ்ப்பாணம், ஏப். 16

400 ஆண்டுகால பழமைவாய்ந்த துணவி சிவன் கோவிலின் சீரமைப்புப் பணிகள், ஜூன் மாதம் முழுமைபெறும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் துறைசார் அதிகாரிகள்

15

## இந்திய உடன்படிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப். 16

இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைப் பயணத்தின்போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஏழு உடன்படிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுடன் நாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கை

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையானுடன் உரையாட ரணில் பிரயத்தனம்!

*கம்மன்பிலவுக்கு அனுமதி*


கொழும்பு, ஏப்.16
தடுப்புக்காவலில் உள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன் (பிள்ளையான்) உரையாடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையானுடன் தொலைபேசிமூலம் உரையாட அனுமதிக்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 9 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆயினும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. தடுப்புக்காவலில் உள்ள சந்தேகநபருடன் தொலைபேசியில் உரையாடுவது சட்டவிரோதமானது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனைச் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சிவநேசதுரை சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக உதய கம்மன்பில செயற்பட்டதால் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)



# 18 உள்ளூராட்சிசபைகளுக்கான அஞ்சல் வாக்குச்சீட்டு அச்சிடுவதில் தாமதம்

**கொழும்பு, ஏப். 16**
**கொழும்பு மாநகரசபை உட்பட 18 உள்ளூராட்சிசபைகளுக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் தாமதமாகியுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

குறித்த உள்ளூராட்சி சபைகளின் வேட்புமனுக்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் இடைக்காலத்தடை உத்தரவுகள் காரணமாக இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உள்ளாட்சித் தேர்தல்களின் அஞ்சல் வாக்கெடுப்பு பாதிக்கப்படலாம்.

227 உள்ளூராட்சிச்சபைகளுக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுகள் ஏற்கனவே அச்சிட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-சி)

# அமைச்சுப் பதவி ஏற்க பொன்சேகா தயாராம்



கொழும்பு, ஏப்.16
தற்போதைய அரசாங்கத்தில் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் பதவியை வழங்கினால் அதை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தகைய பொறுப்பு வழங்கப்பட்டால் ஏற்பதற்குத் தயங்கமாட்டேன். ஆயினும் ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான திசைகாட்டி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு பங்களிக்காததால், அத்தகையை பொறுப்பைக்கோர எந்தவித உரிமையும் எனக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 16
கல்குளம் பகுதியிலிருந்து மிஹிந்தலை நோக்கிச் சென்ற கப்ரக வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி ஒரு கால்வாயில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். மிஹிந்தலைப் பொலிஸார் இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ச-சி)

# இளைஞன் வெட்டிக்கொலை

கொழும்பு, ஏப். 16
கண்டி கலஹ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகேபிட்டியப் பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என கலஹ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

26 வயதுடைய இளைஞனே கொலை செய்யப்பட்டுள்ளார்.

முன்விரோதம் காரணமாக ஏற்பட்ட தகராறின் போது இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கொலபிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# உள்ளூராட்சியில் வென்றால் நடைபாதைக் கடை அகற்றம்!

*ஜனநாயகத் தேசியக் கூட்டணி கூறுகின்றது*

வவுனியா, ஏப்.16
உள்ளூராட்சித் தேர்தலில் நாம் வெற்றிபெற்றால் வவுனியா நகரப்பகுதியில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள அனைத்து நடைபாதை வியாபார நிலையங்களும் அகற்றப்படும் என்று ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வவுனியா மாநகரசபை முதன்மை வேட்பாளர் ப. கார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நடைபாதை வியாபார நிலையங்களால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இலுப்பையடிப்பகுதி, நகரபள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள வீதி, மருத்துவமனை வீதி என்பவற்றின் நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டு வியாபாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு மாற்றுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நாம் வெற்றிபெற்று மாநகர சபையின் அதிகாரம் எமது கைகளுக்கு வழங்கப்பட்டால் நகரிலுள்ள அனைத்து நடைபாதை வியாபாரநிலையங்களையும் நிச்சயமாக அகற்றுவோம். மாற்றீடாக பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவுசெய்து அங்கு வியாபார நிலையங்களை அமைப்பதற்கான முறைமை ஒன்றையும் உருவாக்குவோம் - என்றார். (எ-110)

# பயணிகளின் வசதிகருதி விசேட போக்குவரத்து சேவை

கொழும்பு, ஏப்.16
புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள், கொழும்பு உட்பட தமது சேவை இடங்களுக்குத் திரும்புவதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வழமையான அட்டவணைக்கு மேலதிகமாக நேற்று முதல் 20 புகையிரதங்கள் மேலதிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை, காலி, பதுளை மற்றும் பெலியத்தை ஆகிய பகுதிகளுக்கு வழமைக்கு மாறாக 20 புகையிரதங்கள் மேலதிக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை நாடளாவிய ரீதியில் 3ஆயிரம் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு பித்தலாட்டம்






## சுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஏப். 16**

**தமிழ் மக்கள் தனித்துவமானவர்களாக இருப்பதற்கு இடமளிக்க கூடாதென்ற நிகழ்ச்சிநிரலுக்கமையவே தேசிய மக்கள் சக்தி செயற்படுகின்றது. அவர்களுடைய பித்தலாட்டம் தற்போது புரியவருகின்றது என ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

தேசிய மக்கள் சக்தியும் ஜே.வி.பி.யும் இரண்டும் ஒன்றே. அதில் அதில் எந்த மாற்றமும் இல்லை. சர்வதேசத்தின் உதவிக்காக தமது தோற்றப்பாட்டை மாற்றியுள்ளனரே தவிர இரண்டினதும் கொள்கையொன்றே.

சந்திரசேகரன் தமிழ் மக்களை மிரட்ட நினைத்தால் அது அவரது இயலாமையாக இருக்கும். ஏனெனில் தமிழ்த் தரப்பினர் இவரைப்போல பலரை, பலரது மிரட்டல்களைக் கண்டவர். கடந்த தேர்தல் காலத்தில் சொன்னதைச் செய்வதற்கு அவர்கள் தற்போது தயாராக இல்லை.

ஏனெனில் தங்களுக்கு எதிராக வர இருக்கின்ற மக்கள் போராட்டங்களைக் கையாளவே பயங்கரவாதத் தடைச்சட்டம் அவர்களுக்குத் தேவையாக இருக்கின்றது.


அத்துடன் அபிவிருத்தி பற்றி பேசும் இவர்கள் புதிதாக எந்தவொரு அபிவிருத்தியையும் செய்யவில்லை. சொல்லாடல்கள் வித்தியாசமாக இருக்கின்றனவே தவிர உள்ளடக்கங்கள் ஒன்றுதான். குறிப்பாக கடந்த அரசுகளின் நிலைப்பாட்டிலேயே இவர்களது பயணமும் தொடர்கின்றது. புத்த விகாரைக் கட்டுமானங்கள் தொடர்கின்றன, கைதிகள் விடுவிக்கப்படவில்லை. அவர்களுடைய பித்தலாட்டம் தற்போது தெரிகின்றது.- என்றார். (ச-125,20)

## சட்டவிரோத சிகரெட் கடத்தியவர் கைது

கொழும்பு, ஏப். 16

இலங்கைக்குச் சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட் வகைகளைக் கடத்திவந்த இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்புப் பகுதியைச் சேர்ந்த குறித்த 24 வயதான இளைஞர் டுபாயில் பணிபுரிந்துவிட்டு இலங்கைக்கு திரும்பியபோதே 3 பயணப் பைகளுக்குள் சட்டவிரோதமாக மறைத்து எடுத்துவந்தார் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-சி)



## ரூ.17 கோடி வருவாய்

கொழும்பு, ஏப். 16

நாட்டில் ஏப்ரல் 11 முதல் 14 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலை மூலம் 17 கோடி ரூபாவுக்கும் மேல் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் 4 இலட்சத்து 97 ஆயிரத்து 223 வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலை ஊடாகப் பயணித்துள்ளன.

கடந்த 11 ஆம் திகதியே அதிகளவான வாகனங்கள் பயணித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)



## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

கொழும்பு, ஏப். 16

மொரட்டுவ, ஹோமாகமப் பகுதியில் 32 வயதான ஒருவர் 7 கிராம் 263 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் நடத்திய சோதனையிலேயே குறித்த இளைஞர் போதைப்பொருளுடன் சிக்கியுள்ளார். அவரிடம் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்தப் பெறுமதி 2.5 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படு கின்றது. சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-சி)

கட்டுத்துப்பாக்கியுடன்

## வவுனியாவில் முதியவர் கைது

வவுனியா, ஏப். 16

வவுனியா, பூவரசங்குளத்தில் கட்டுத்துவக்கு ஒன்றுடன் சிவநகர்ப் பகுதியைச் சேர்ந்த 66 வயதான முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே அவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதான சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-சி)

**மாற்றமொண்டுதான் மாறாதது எண்டு சொல்லுவினம். ஆனால் அந்த மாற்றம்கூட பொருத்தமா இல்லாட்டி ஏமாற்றமாப்போடும். சிலர் தாங்கள் புதிசா, வித்தியாசமா செய்து தங்கட எழுப்பத்தைக் காட்டுறதா நினைச்சு, நல்லா இருந்த விசயங்களைக்கூட நாசமாக்கி இருக்கினம். அப்பிடியொரு விசயத்தால் இந்தமுறை புளியம்பொக்கணைப் பொங்கலுக்குப் போன சனங்கள் சரியாக் கஷ்டப் பட்டுப் போட்டுதுகள்.**

**கிளிநொச்சியில் இருக்கிற புதுமை நிரம்பின கோயில்களில புளியம்பொக்கணையும் ஒண்டு. பங்குனியில அங்க நடக்கிற பொங்கலுக்கு வெளிமாவட்டங்களில இருந்தெல்லாம் சனங்கள் கடல்மாதிரி வருவினம். கார், மோட்டர் சைக்கிள், பஸ் எண்டதோட மாட்டுவண்டில், லாண்ட் மாஸ்ரர், டிராக்டர் எண்ட வாகனங்களில வாற ஆக்கள்தான் கூட. அதுவும் இரவில வாறவைதான் இன்னும் கூட. அப்பிடிப் புளியம்பொக்கணைக்கு வாறவை கோயிலைக் கும்பிட்டு, இரவிரவா கோயில் வீதியிலையே பாய் போட்டு குடும்பம் குடும்பமா இருந்து, விடியப்பிறம் நடக்கிற பொங்கலையும் பார்த்திட்டு காலமைதான் வீடுகளுக்குப் போவினம். அதோட பாற்காவடி, செதில் காவடி, பறவைக்காவடி, கற்பூரச்சட்டி எண்டு நேர்த்தி வைச்சவையும் விடியும்வரைக்கும் வந்து கொண்டே இருப்பினம். அதால நேரம் போகப் போகத்தான் சனக்கூட்டம் கூடிக்கொண்டிருக்கும். இப்பிடி அலையலையா வாற ஆக்களும், வாகனங்களும் நெரிபடாமல் மெயின்றோட்டால் உள்ளுக்க போய், வயல்பக்கமா உள்ள மண் றோட்டால வெளியில போறமாதிரித்தான் இவ்வளவு நாளும் நடைமுறை இருந்தது.**

**ஆனால் இந்தமுறை போக்குவரத்து ஏற்பாடுகளுக்குப் பொறுப்பா இருந்த பொலிஸ்காரர், நடைமுறையை மாத்தவெளிக்கிட்டிருக்கினம். பின்னேரக்கையோட சனம் வாறது கூடவா இருந்ததால, மெயின் றோட்டாலை மட்டுமில்லாமல் மண்றோட்டாலையும் கோயிலுக்குப் போக விட்டிருக்கினம். அதால மண் றோட் பக்கமாக வெளியில போறதுக்காகவும், உள்ளுக்க வாறதுக்காகவும் வாகனங்களும், ஆக்களும் நேருக்கு நேர சந்திச்சதால ரண்டு பக்கமும் போகமுடியாமல் கடும் நெரிபாடாப்போட்டுதாம். வெறும் அரைக்கிலோமீற்றர் தூர மண்றோட்டில ஒரு மணித்தியாலத்துக்கும் மேல ஊர்ந்து ஊர்ந்து, நெரிபட்டு, முன்னுக்குபோற வாகனங்களோட முட்டுப்பட்டு, அடிபட்டுத்தான் கோயிலுக்குப் போக முடிஞ்சுதாம். இதைவிட முந்தினமாதிரி ஒரு பாதை போறதுக்கும், மற்றப்பாதை வாறதுக்குமெண்டு விட்டிருந்தால் சனம் இப்பிடிக் கஷ்டப்பட வேண்டி வந்திருக்காதெல்லோ. அடுத்தவருசமும் இந்தமுறை செய்தமாதிரி குழப்பியடிக்காமல், போறதுக்கும் வாறதுக்கும் தனித்தனிப் பாதையளை விடுறதுதான் சரியாயிருக்கும் கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வந்துசேரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். திடீர்ச்செலவுகள் மனதைச் சஞ்சலப்படுத்தும். முக்கிய முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை இருந்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம்** : எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நன்மை ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**மகரம்:** எதிலும் சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச்செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

### சஹல் என்னும் சம்பவக்காரன்!

# கொல்கத்தாவை மடக்கி பஞ்சாப் சாதனை வெற்றி

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், பஞ்சாப் நிர்ணயித்த 112 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டிப்பிடிக்க முடியாமல், 95 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து படுதோல்வியடைந்தது கொல்கத்தா. ஐ.பி.எல். வரலாற்றில் இரண்டாவது இன்னிங்ஸில் மிகக் குறைந்த ஓட்டங்களில் ஒரு அணியைக் கட்டுப்படுத்திய சாதனையை பஞ்சாப் படைத்தது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு பிரியான்ஷ் ஆர்யா மற்றும் பிரப்சிம்ரன் சிங் இருவரும் அபாரமான இன்னிங்ஸை அமைத்துக் கொடுத்தனர். 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிரியான்ஷ் ஆர்யா. 30 ஓட்டங்களுடன் பிரப்சிம்ரன் சிங்கும் வீழ்த்தப்பட்டார். இந்த இரண்டு இலக்குகளும் சரிக்கப்பட்ட பின்னர், பஞ்சாப்பின் இன்னிங்ஸில் ஏமாற்றமே மிஞ்சியது. ஷஷான் சிங் பெற்ற 18 ஓட்டங்களே மூன்றாவது அதிகபட்சம். முடிவில் 111 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது பஞ்சாப்.




பந்துவீச்சில் ராணா 3 விக்கெட்களையும், வருண் சக்கரவர்த்தி, நரைன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர்களான குயின்டன் டி ஹொக் 2 ஓட்டங்களுடனும், நரைன் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். 7 ஓட்டங்களில் 2 விக்கெட்களை இழந்தது கொல்கத்தா. பதிலுக்குக் களமிறங்கிய ரகானே, ரகுவன்சி இருவரும் இணைந்து பொறுப்பாக ஆடினார்கள். அணி 62 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 17 ஓட்டங்களுடன் சஹலால் வீழ்த்தப்பட்டார் ரகானே. ரகுவன்சியும் 37 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இந்த விக்கெட்டுடன் பஞ்சாப்பின் இன்னிங்ஸில் நம்பிக்கை பிறந்தது. வெங்கடேஸ் 7, ரிங்கு சிங் 2 என அடுத்தடுத்து வீழ்ந்தனர். ஒருமுனையில் ரசல் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டன. கடைசி விக்கெட்டாக ரசலும் ஆட்டமிழக்க முடிவில் 95 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது கொல்கத்தா. 16 ஓட்டங்களால் வென்றது பஞ்சாப். 4 விக்கெட்களைக் கைப்பற்றிய சஹல் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

**பதிலடி**

கொல்கத்தா அணி கடந்த வருடம் ஸ்ரேயாஸின் தலைமையில் கிண்ணம் வென்றது. எனினும், ஸ்ரேயஸைத் தக்கவைக்காமல் அவரை கொல்கத்தா விடுவித்தது. இந்த விடயம் கிரிக்கெட் அரங்கில் ஆச்சரியமாகப் பார்க்கப்பட்ட நிலையில், தன்னை வெளியேற்றிய கொல்கத்தாவை குறைந்த ஓட்டங்களில் சுருட்டி ஐ.பி.எல். சாதனையைப் படைத்துள்ளார் ஸ்ரேயஸ். (ம)






கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புத்தாண்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதோடு விநாயகப்பெருமான் எழுந்தருளி வீதியுலா வந்தார். (ச-41-17)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறப்புப் பூஜைகள் இடம்பெற்றன. தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜையும் சுவாமி வீதியுலாவும் இடம்பெற்றன. (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

முறையான கல்வி உங்களுக்கு வாழக் கற்றுக்கொடுக்கும்; உலகறிவே உங்களை வளமாக்கும்.

– ஜிம் ரோஹன் –

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# காணாமல் போகும் நம்பிக்கைகள்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரியும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் பல ஆண்டுகளாக நடத்தப்படும் தொடர் போராட்டங்கள் பொறுப்புக்கூறவேண்டியவர்களால் திட்டமிட்டுக் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வரும்நிலையில் புத்தாண்டு தினமான நேற்றுமுன் தினமும் உறவுகளால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழந்துள்ளதை இந்தப் போராட்டத்தில் மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இறுதிப் போரில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும், அதைவிட வேறு சந்தர்ப்பங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது என்ற கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை. நாட்டில் போர் முடிந்து சுமார் 15 ஆண்டுகள் கடந்துள்ள போதும் நாட்டில் ஆட்சியில் இருந்தவர்கள் இந்தக் கேள்விக்கு விடைதேடவோ அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவோ இதயசுத்தியுடன் முயலவில்லை, மாறாக இந்தக் கேள்விக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களைக் காப்பாற்றும் வகையிலேயே செயற்பட்டிருந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், ஆணைக்குழுக்கள் என்பன கடந்த காலங்களில் உருவாக்கப்பட்டிருந்தன. இருப்பினும் சர்வதேசத்தின் அழுத்தங்களைச் சமாளிக்கும் நோக்கிலேயே இவை உருவாக்கப்பட்டிருந்தன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதிலேயே நாட்டம் காட்டப்பட்டதே தவிர, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கு அரசாங்கங்கள் சிறு முயற்சியையேனும் முன்னெடுக்கவில்லை.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிபெற்றுக் கொடுக்கப்படும் என்ற சிறு நம்பிக்கை தமிழ் மக்களிடம் ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கமும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் காத்திரமான நடவடிக்கைகள் எவற்றையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் என்ற தமிழ் மக்களின் நம்பிக்கையை இழந்த பொறிமுறையையே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கப்போகின்றது என்பதையே அரசாங்கத் தரப்பில் இருந்துவரும் கருத்துகள் புலப்படுத்துகின்றன. தமிழ் மக்களின் முக்கியமான கோரிக்கைகளான காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அரசியற் கைதிகளின் விடுதலை, இனப்பிரச்சினைக்கான தீர்வு என எந்த விடயங்களிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தி, இரு தேர்தல் வெற்றிகளின் பின்னரும் தமிழ் மக்களின் முக்கியமான அபிலாஷைகள் தொடர்பில் பாராமுகமாகவே இருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தமிழ் மக்களை ஏமாற்றும் இந்தப் போக்குத் தொடருமானால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்ததைப் போன்று ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் நம்பிக்கையையும் அரசாங்கம் இழக்க நேரிடும். தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்கி, பின்னர் அவற்றைக் கிடப்பில் போடும் கடந்தகால அழுக்கு அரசியலை விடுத்து, தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குநீதி வழங்குவதற்கான பொறிமுறைகளை விரைவாகச் செயற்படுத்துவது அவசியம். இனங்களின் நல்லிணக்கத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை உட்பட, தமிழ் மக்கள் நியாயமான அபிலாசைகளைக் கருத்தில் எடுத்து அவற்றுக்கு நீதி வழங்க அரசாங்கம் முயலவேண்டும். கடந்த கால அரசாங்கங்களின் செயற்பாடுகளால் ஏற்பட்ட வெறுப்பே தேசிய மக்கள் சக்திக்கான வாக்குகளாக மாறியிருந்தது. அதைப் புரிந்துகொண்டு செயற்படாவிட்டால் தற்போதைய அரசாங்கமும் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து தூக்கியெறியப்படும் என்ற நிதர்சனத்தை ஆட்சியிலுள்ளவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.




# நான்கு நாள்களில் ரூ.600 மில்லியன்



## இ.போ.ச. வசூல்

கொழும்பு, ஏப். 16

கடந்த 4 நாள்களில் இலங்கைப் போக்குவரத்துச்சபை 600 மில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதாக அதன் பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.டி.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தையொட்டி அதிகளவான பேருந்துகள் சேவையில் ஈடுபட்டமையினால் இந்த வருமானத்தை ஈட்ட முடிந்துள்ளது.

நாளொன்றுக்கு சுமார் 200 மில்லியன் ரூபா வரை வருமானமாக ஈட்ட முடிந்துள்ளது.

இந்த வருடம் தமிழ், சிங்களப் புத்தாண்டையொட்டி பொதுமக்களின் வசதிக்காக சுமார் 350 பேருந்துகள் மேலதிகமாக இயக்கப்பட்டன.

அதேவேளை, கடந்த 9 ஆம் திகதி முதல், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளில் சுமார் 5 இலட்சம் பயணிகள் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# எல்பிட்டிய விபத்தில் 6 வயதுச் சிறுமி பலி

கொழும்பு, ஏப்.16

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். பலர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எல்பிட்டிய அம்பலாங்கொட வீதியிலுள்ள குருந்துகஹா நகரில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது. அம்பலாங்கொடையில் இருந்து எல்பிட்டிய நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி எதிர்த்திசையில் இருந்துவந்த ஹைஏஸ் ஒன்றின் மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. (ச-இ)

# தேர்தல் விதிமீறல்கள் 16 வேட்பாளர்கள் கைது



கொழும்பு, ஏப். 16

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 164 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 130 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 34 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.


அதேவேளை தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 16 வேட்பாளர்களும் 57 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு, ஏப்.16

மட்டக்களப்பு போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலையடிவட்டை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

3 பிள்ளைகளின் தந்தையான இராசதுரை ரஜீகரன் (வயது-31) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)



# அதிகளவான நீர் அருந்துங்கள்

கொழும்பு, ஏப். 16

நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பம் நிலவும் நிலையில் கவனம் செலுத்துமாறும் அதிகளவில் தண்ணீரைப் பருகுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. குறிப்பாக வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இந்த உயர் வெப்பநிலை அதிகமாக இருக்கும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



நாளை
வியாழக்கிழமை -சித்திரை 04
17.04.2025
சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம் : 01.34 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் நெருக்கடியில் நகர்ப்புற மாணவர்கள்!




## யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஏப். 16**

**நகர்ப்புற மாணவர்கள் மனநெருக்கடி உட்பட பல்வேறு உளவியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றனர் என்று யாழ்.போதனா மருத்துவ மனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமப்புற மாணவர்களுக்கு சிறந்த சூழலை சனசமூக நிலையங்கள், சமூகமட்ட அமைப்புகளின் ஊக்குவிப்புகள் என்பன கட்டியெழுப்புகின்றன. ஆகவே மாணவர்கள் கல்வியுடன் சேர்த்து விளையாட்டுகளிலும் கலைகளிலும் தங்களை ஈடுபடுத்தவேண்டும். இதனூடாக அழுத்தங்களிலிருந்து விடுபடும் நிலையேற்படும். அத்துடன் நீங்கள் எப்போதும் கற்பதற்கு தயாராக இருக்கவேண்டும். கல்வி என்பது முக்கியமானது என்பதனை நீங்கள் கருத்திற்கொள்ளவேண்டும்.

தவழும் குழந்தை தத்தித் தத்தி நடைப்பயிற்சி செய்த பிறகே நடக்கத் தொடங்குகின்றது. வெற்றிபெற வேண்டுமானாலும் நாம் எத்துணை கடினமாகப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். உங்களிடம் என்ன திறமை ஒளிந்துள்ளது என்று கண்டுபிடித்து, அதனைத் தொழில்முறைத் தகுதியாக மாற்றிக்கொள்ளுங்கள் - என்றார். (ச-125)

# பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நீச்சல் குளங்களுக்கு நியமிக்குக

## ஜெகதீஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, ஏப். 16

வவுனியா மாவட்டத்தில் உள்ள நீச்சல் தடாகங்களை மக்கள் பயன்படுத்தும்போது அங்கு நீச்சல் தெரிந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நீச்சல் தடாகத்தில் இளைஞன் ஒருவன் பலியாகியதையடுத்து மருத்துவமனைக்குச் சென்று சென்று சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள நீச்சல் தடாகங்களில் நீச்சல் தெரிந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றன. இதனால் கடந்த காலங்களிலும் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றன.

எனவே எவராக இருந்தாலும் நீச்சல் தடாகத்தை இயக்குவதாக இருந்தால் அங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அவர் முன்னிலையில் மக்கள் அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும் நடைமுறையைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-110)

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 03 . 1934



மறைவு
15 . 04 . 2025

## நாகம்மா நடராசா

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா நடராசா அவர்கள் நேற்று (15.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு-சின்னம்மா தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-முத்துப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மருமகளும் நடராசா அவர்களின் அன்பு மனைவியும் ஆறுமுகதாஸ், சண்முகதாஸ் (சுவிஸ்), சற்குணதாஸ் (சுவிஸ்), கணேசதாஸ் (சுவிஸ்), புனிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ரஞ்சனா மற்றும் அன்னமேரி (சுவிஸ்), அற்புதகௌரி (சுவிஸ்), இலங்கேஸ்வரி (சுவிஸ்), மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பைரவி, பராபரன், பராதீபன், பத்மசுகி மற்றும் விஜிதா, சகானா, சரன்னியா, சர்மிழன், கௌசிகன், சந்தியா, லக்ஷனா, கஸ்தூரிகா, கஸ்விகா, கஸ்னியன், கீர்த்தனா, கீருஷ்த்திகா, கீர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மித்ராவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சின்னத்தம்பி புலவர் வீதி,**
**இணுவில் கிழக்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**[illegible]**

# விளையாட்டு விழா

பளை, ஏப். 16

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான பிரதேசமட்ட விளையாட்டு விழா, பச்சிலைப்பள்ளி பொது விளையாட்டு மைதானத்தில் நாளை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறும்.

பிரதேச செயலர் இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் பா. முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந்திரன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் ம. நி. மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-25,9)



தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரை அலுவலகம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் பரந்தன் பகுதியில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. (ச-25,113)



நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோவில் வருடாந்த மகோற்சவப் பெருவிழாவின் இரதோற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும் தீர்தோற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமையும் இடம்பெற்றன. (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாவசு தமிழ் புத்தாண்டு பலன்கள் - 2025



## ரிஷபம்



## சிக்கல்கள் விலகும்

**இடப ராசியினருக்கு...**

இந்த தமிழ்ப் புத்தாண்டில் நல்ல பலன்களைப் பெறுபவர்களில் ரிஷப ராசியினரும் ஒருவர். குறிப்பாக உங்களுக்கு ஜென்ம குரு விலகுகிறது. இலாப ஸ்தானத்தில் சனி பகவான் வருகிறார். 5 இல் இருந்து கேது பெயர்ச்சியாகிறார். மிகப்பெரிய மாற்றங்கள் உண்டாகும்.

இந்தப் புத்தாண்டில் பட்டம், பதவி, பெயர், புகழ் உண்டாகும். ஜென்ம குருவில் சிக்கி மன இறுக்கத்தில் வாழ்ந்துவந்திருப்பீர்கள். கடந்த இரண்டரை வருடங்களாக பல கஷ்டங்களை அனுபவித்துவந்திருப்பீர்கள். இனித் தெளிவான முடிவெடுத்து பல விஷயங்களை சாதிக்கக்கூடிய காலகட்டமாக இருக்கும்.

2 இல் குரு வந்திருப்பது குடும்பம், வாக்கு, தனம், கல்வி, பொருளாதாரத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்படும்.

தொழிலில் நல்ல மாற்றம் வரும். குழந்தை பாக்கியத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு புத்திர பாக்கியம் உண்டாகும். பிள்ளைகளுக்கு இருந்து வந்த உடல்நலப் பிரச்சினைகள், கல்வியில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். திருமண யோகம் கூடிவரும். வேலைவாய்ப்பு நேரடியாக 8 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் வழக்கு சாதகமாகமுடியும்.

கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல்கள் அனைத்தும் தீரும். படிப்படியாக அதில் இருந்து வெளியில் வருவீர்கள். 10 இல் விலகக்கூடிய சனி, 10 ஆம் இடத்தில் வரும் ராகு மிகப்பெரிய பொறுப்பை உண்டாக்கித் தரும். வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு, இடமாற்றம், சேமிக்கும் யோகம் ஏற்படும். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மற்றவர்களுக்கு உதவும் அளவுக்கு உங்களுக்கு பண வரவு உண்டாகும்.


விபத்துகள் ஏற்படக்கூடிய காலகட்டமாக இருக்கும். வாகனங்களில் பழுது ஏற்படும் வாய்ப்புள்ளது. ஏதாவதொரு விபத்து, பழுதுகள் ஏற்படும். தாய் விஷயத்தில் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. இதில் மட்டும் கவனமாக இருந்தால் போதும் மற்ற அனைத்தும் அமோகமாக நடக்கும்.

எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், யோகம் ஏற்படும். கலைநயம் சார்ந்த விஷயங்களில் உங்களுக்கு ஈடுபாடு அதிகமாக இருக்கும். திருமணத்தடைகள் அனைத்தும் நீங்கும். மனதுக்குப் பிடித்த வரன்கள் அமையும்.

**கார்த்திகை 2,3,4 பாதங்கள்:** இந்த ஆண்டு உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்தக் குறையும் இருக்காது. உடன்பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தைச் சந்திக்கலாம்.

**ரோகினி:** இந்த ஆண்டு சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். ஆனாலும் உழைப்புக்கேற்ற லாபம் கிடைக்கும். தொழில்நிமித்தமாக நீண்டதூரம் பயணம் போக வேண்டிவரும்.

**மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள்:** இந்த ஆண்டு எதிரிகள் வகையில் அசட்டையாக இருத்தல் கூடாது. புதிய முதலீடுகளின்போது ஆலோசனைகள் அவசியமாகிறது. பணவிஷயத்தில் தொடர்ந்து அக்கறை தேவை.




தவக்காலத்தை முன்னிட்டுத் தூய மரியன்னை ஆலய இளையோர் மன்றம் ஏற்பாடு செய்து நடத்திய குருதிக்கொடை முகாம் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் தூய மரியன்னை ஆலய மண்டபத்தில் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு ம.பத்திநாதர் தலைமையில் இடம்பெற்றது. குருதிக்கொடை முகாம் நிகழ்வில் 51பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். (எ-66)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கப் பொதுக்கூட்டமானது தலைவர் க.நாகஜெயகுமார் தலைமையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க பொது அறையில் இடம்பெறவுள்ளது. அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)





தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா சித்திரைப் புத்தாண்டு நன்னாளான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் மிகவும் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது. (எ-66)

## சில நாள்களுக்கு வெப்பம் நீடிக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 16


அதிக வெப்பநிலையுடன் பிற்பகலில் ஒரு சில இடங்களில் மழைவீழ்ச்சியுடன் கூடிய வானிலை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேலும் சில நாள்களுக்கு நிலவுமென யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணிக்கு வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் அளவீடுசெய்யப்பட்ட வெப்பநிலை சராசரியாக 34 பாகை செல்சியஸ் ஆகக் காணப்பட்டது. வடக்கு மாகாணம் முழுவதும் சாரீரப்பதனின் அளவு 70 வீதத்தினை அண்மித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 04 . 1940



மறைவு 13 . 04 . 2025

## செல்லத்துரை இராஜரட்ணம்

கேணியடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு, கொழும்பு, நெடுங்கேணி, பிரித்தானியா ( ஹறோ) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அவர்கள் கடந்த 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இலட்சுமி தம்பதியின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான தர்மவரதர்-தவமணி தம்பதியின் அன்பு மருமகனும், கமலாஜினி ராஜரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திரு.செகராஜசிங்கம், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் திருமதி பகவதி சிவசுப்பிரமணியம், திருமதி ஆதிதேவி சரவணபவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரணி, அரவிந், அபினேஷ் ஆகியோரின் பாசமிகு வளர்ப்புத் தந்தையும் கிருபாகரன், சிவாகரன் , சசிகலா, ஜெயாகரன், கருணாகரன், சிவராஜா, சிவபாலா, சிவதர்ஷனி, செல்வநாதன், கார்த்திகா, பானு, ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் இராஜேஸ்வரன், வாசுகி, சுதாகரன், மைதிலி, மேனகா ஆகியோரின் பாசமிகு தாய் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

சுதாகரன் (மருமகன்) - பிரித்தானியா 00447477413492
ச. செல்வா (மருமகன்) - இலங்கை 0741628743
சிவதர்சினி செல்வநாதன் ( பெறாமகள்) - பிரித்தானியா 00447443042885
மகேஸ்வரி செகராஜ சிங்கம் (சகோதரி) - இலங்கை 0779782635

தகவல்:
**குடும்பத்தினர்.**

# பயிற்சிநெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 16

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் முதலாம் கல்வியாண்டின் தொழிற்தகைமைச்சான்றிதழ் மற்றும் குறுங்காலப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நீரியல் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ தேசிய டிப்ளோமா, கடலுணவு தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா, கடலக ஏற்பாட்டியல் மற்றும் முகாமைத்துவ தேசிய டிப்ளோமா, நீரியல் வளத் தொழிநுட்பவியலாளர், வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக மாலுமி, சுழியோடி, உயிர் பாதுகாப்பு போன்ற பயிற்சிநெறிகளும் மேலும் அலங்கார மீன்வளர்ப்பு, நீச்சல் பயிற்சி, கடலக வரைபடம் வாசித்தல், செய்மதித் தொடர்பாடல், கடற்பாசி மற்றும் கடலட்டை வளர்ப்பு, இழைநார் படகு திரித்தல் போன்ற பயிற்சி நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

க.பொப.த சாதாரண தரம், உயர் தரத்தில் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் ஆர்வமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம், விண்ணப்பங்களை உதவிப் பணிப்பாளர், இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம், பிராந்திய நிலையம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலமோ நேரிலோ சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-25)

# மரண அறிவித்தல்

மலர்வு 19 . 10 . 1981



உதிர்வு 07 . 04 . 2025

## வன்னியசிங்கம் கெங்காஜீவன்

சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் வீதியை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா மெல்போர்ன் Truganina வை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் கெங்காஜீவன் 07/04/2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் வன்னியசிங்கம் மற்றும் கமலாதேவி வன்னியசிங்கம் அவர்களின் தவப்புதல்வனும், வேலுப்பிள்ளை குகனேஸ்வரன், புஷ்பராணி ஆகியோரின் அன்பு மருமகனும், கேமாலினி அவர்களின் அன்புக் கணவரும் ஜஸ்மிதா, டினுசா, கேமலஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜீவன் (லண்டன்), கோபிநாத் (லண்டன்), குகதாரணி (அமெரிக்கா), கஜரூபன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயன் (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), ஜெனனி (இலங்கை), நிஷானி (ஓமன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் (16.04.2025) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு Tobin Brothers. 364 Main Road West. St Albans VIC 3021 Australia எனும் முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு, மதியம் 01.00 மணிக்கு Altona Memorial Park,2-14 Doherty Road, Altona North VIC 3025 உடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசகேசரி விநாயகர் வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
வே.குகனேஸ்வரன்
(குகன் மாஸ்டர்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 08 . 1941



மறைவு 15 . 04 . 2025

## அருணாசலம் புலேந்திரன் (ஓய்வு பெற்ற Anti Malariya Operator)

மட்டுவில் தெற்கினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் புலேந்திரன் அவர்கள் கடந்த 15.04.2025 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-வள்ளிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா-முத்துப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மருமகனும் கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, அருட்பிரகாசம், தெய்வேந்திரம் (பிரான்ஸ்) மற்றும் சிவபாக்கியம், தில்லைநாயகர், படவீரசிங்கம், கந்தசாமி, டீமிலாதேவி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கமலேந்திரன் மற்றும் அருந்தினி (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்), அரவிந்தன் (வசந்தன்-நீர்வளசபை யாழ்ப்பாணம்), ஜீவநந்தினி (லண்டன்), குணசீலன், டனிசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவபாலன் (லண்டன்), லக்சனா (லண்டன்), பிறேமா, சிவசெல்வன் (லண்டன்), கம்சனா (மாவட்ட செயலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரகிர்த்தன், கிரிஷா, ரித்விகா, லவுணிகா, அபிலாஷ், கபிசன், தக்சன், தர்வின், கர்சின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 129 3515, 077 384 7293

# 10 வது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 22.09.1944 விண்ணில் : 08.04.2015

## அமரர் இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

அப்பா இல்லாத உலகம்
நேற்றுப்போல் இருக்கின்றது
அப்பாவுடன் சிரித்துப் பேசி
மகிழ்ந்திருந்த நாட்கள் - ஆனால்
அப்பா இல்லாத உலகத்தில்
பத்தாண்டுகள் உருண்டோடிவிட்டன
அப்பாவின் கைப்பிடித்து நடந்த
பொன்னான வசந்த காலங்கள்
நிழலாய் இன்னும் தொடர்கின்றன
அப்பாவின் கரம் பிடித்து நடந்தால்
கவலைகள் எதுவும் இருக்காது
அம்மாவின் அன்பை விட எப்போதும்
அப்பாவின் அன்பு சிறந்தது - ஆனால்
தாயின் அன்பை புரிந்துகொள்ளும் அளவிற்கு
தந்தையின் அன்பை யாரும் இலகுவில்
புரிந்துகொள்ள முடிவதில்லை
அப்பாவின் அன்பை உணர்ந்துகொள்ள
எப்போதும் நீண்ட காலங்கள் எடுக்கின்றது
அதற்குள் காலம் அவரைக்
கவர்ந்து சென்றுவிடுகின்றது
கடவுளுக்கும் அப்பாவுக்கும் சிறு வேறுபாடுதான்
கண்களுக்கு தெரியாமல் இருப்பது கடவுள்
கண்களுக்கு தெரிந்தும் கடவுள் என
புரிந்து கொள்ளப்படாதவர் தான் அப்பா
வாழ்க்கைப் பயணத்தில் வரும் வலிகளை மறக்க
அப்பாவின் உறுதியான வார்த்தைகள்
எப்போதும் நம்பிக்கையைத் தருகின்றன

தோற்றுப் போகும் நேரங்களில் எல்லாம்
வெற்றிக்கு வழிகாட்டும் அவரது கதைகள்
நெஞ்சிற்கு உறுதியாக உரமூட்டுகின்றன
சிறு பருவத்தில் தோளில் சுமந்து
இளமைப் பருவத்தில் இனிமை தந்து
துவண்ட பருவத்தில் துணையாய் இருந்து
நாம் வாழும் காலத்தில் ஏனோ
நெடுந்தொலைவு சென்றுவிட்டார்
தன்னைவிட அதிகம் சம்பாதித்தால்
பொறாமைப் படாதவரும்
தன்னைவிட அதிகம் முன்னேறினால்
மகிழ்ச்சியில் திளைப்பவரும் அப்பா மட்டும்தான்
"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"
அப்பா இல்லாத உலகம் எல்லோருக்கும்
தெய்வம் இல்லாத கோவில் போன்றது
எந்த ஆண் நினைத்தாலும்
குழந்தைக்கு தந்தையாக முடியும்
ஆனால், பொறுப்புள்ள தந்தையாக
எல்லோராலும் வாழமுடிவதில்லை.
பொறுப்புள்ள தந்தையாக,
அன்பு நிறைந்த கணவனாக,
பாசம் கொண்ட சகோதரனாக,
பேரன்பு கொண்ட பேரனாக...
எல்லோருக்கும் எல்லாமாக வாழ்ந்த
பாசத்திற்குரியவரை இன்னாளில் நினைவு
கூருகின்றோம்.

கலாபூஷணம், கலைவாரிதி
(பண்ணாகம் சுளிபுரம்)

தகவல்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
16.04.2025
புதன்கிழமை

> உங்களுக்கு ஒரு தகுதி வேண்டும் என்றால், ஏற்கெனவே அதனைப் பெற்றுவிட்டதைப் போல செயலாற்றுங்கள்.
>
> - வில்லியம் ஜேம்ஸ்



# கச்சிதமான ஆற்றுகைக்கு இலக்கணமான வெள்ளியில் ஞாயிறு!



கிறிஸ்தவர்களின் வருடாந்த நாட்காட்டிகளில் தவக் காலம் தனித்துவமானது. மனிதனை இறைவ னின்பால் புதுப்பிக்கும் அந்த ஒப்பற்ற காலத்தை நினைவுகூரும் விதமாக, உலகில் பல்வேறு நாடுகளிலும் பலதரப்பட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின் றன. குறிப்பாக சடங்காகவும், நாடகமாகவும் நிகழ்த்தப்படுகின்ற திருப்பாடுகளின் காட்சி நீண்டகாலமாக பல நாடுகளிலும் மேற் கொள்ளப்படுகின்றது. இலங்கையில், ஆரம்பத்தில் மரத்தாலான பொம்மைகளைக்கொண்டு நிகழ்த்தப்படும் 'உடக்குப் பாஸ்' மரபே காணப்பட்டது. 1950ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரே மனிதர்கள் நடிக்கும் மரபாக இது வளர்ச்சி அடைந்தது.

எனினும், ஆரம்பத்தில் ஆங்கிலமொழியை மையப்படுத்திய ஆற் றுகைகளே இடம்பெற்றன. அதன் பின்னரே தமிழ், சிங்களம் போன்ற சுதேச மொழிகளில் ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன. எனினும், ஆரம்பகாலத் தமிழ் ஆற்றுகைகள் மொழிபெயர்ப்பு ஆற்றுகைகளாகவே காணப்பட்டன. இன்று இந்தவடிவம் உயர் செழுமை மிக்க கலைமரபாக மாறி இருக்கின்றதென்றால் அதற்கு அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளும் திருமறைக் கலாமன் றமுமே பிரதான காரணிகள். அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

1963ஆம் ஆண்டு மரியசேவியர் அடிகள் மன்னாரில் முதன் முதல் மனிதர்கள் நடிக்கின்ற பாடுகளின் நாடகமொன்றினை எழுதி மேடையேற்றினார். அன்றில் இருந்து இன்றுவரை கடந்த 60 ஆண்டுகளாக அவரால் இப்பணி முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது. இப்பணியை சிறப்பாக மேற்கொள்ளும் நோக்கிற்காகவே 1965ஆம் ஆண்டு அவரால் திருமறைக்கலாமன்றம் உரு வாக்கப்பட்டது. திருமறைக்கலாமன்றம் என்ற நிறுவனமா னது இம்மரபினை இன்று பிரமாண்டமான கலைத்துவம் மிக்க நாடகப் பாரம்பரியமாக வளர்த்து விட்டிருக்கின்றது.



## ஓர் ஒப்பற்ற நோன்புப் பயணம்



### வெள்ளியில் ஞாயிறு

திருமறைக் கலாமன்றத்தில் இவ்வருட நாடக ஆற்றுகை யாக 'வெள்ளியில் ஞாயிறு' காட்சிப்படுத்தப்பட்டது. கடந்த 10ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிவரை இடம்பெற்ற இந்த ஆற்றுகையில் ஒவ்வொருநாளும் பலநூறு மக்கள் தங்க ளின் குடும்பங்கள் சகிதம் கலந்துகொண்டனர். இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என அத்தனை யையும் கண்முன் தத்ரூபமாகக் கொண்டுவரும் வகை யில் இந்த ஆற்றுகைகள் அமைந்திருந்தன. ஒலி, ஒளி அமைப்புகள் உயர்நிலையில் பேணப்பட்டன. தலைமைச் சங்கத்தினரின் நடவடிக்கைகள், இயேசுவின் சீடர்களுக்கு இடையிலான கதையாடல்கள் காட்சிப்படுத்தப்பட்ட விதம் அற்புதமானது. தவக்காலம் என்றாலே, அது திருமறைக் கலாமன்றத்தால் வழங்கப்படும் ஆற்றுகையுடன்தான் முழுமைபெறும் என்றாகிவிட்ட நிலையில், அந்த எண் ணக்கருவுக்கான மற்றொரு முழுமையான அம்சமாகவே இவ்வருடத்தின் 'வெள்ளியில் ஞாயிறு' ஆற்றுகை அமைந் துள்ளது என்றால் அது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிவரும் ஆசிரியத்துவம்

மு.விக்னேஸ்வரன்
ஓய்வு நிலை அதிபர்



'எமுத்தறிவித்தவன் இறைவன்' என்று விதந்துரைத்துப் போற்றப்பட்டவர்கள் எங்கள் ஆசிரியர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. வடமாகாணத்தில் சில தசாப்தங்களுக்கு முந்திய கல்வியின் பெறுமானம் பற்றிப் பல தரப்பினராலும் பல்வேறுபட்ட எண்ணங்கள் சிந்தனைகள் ஆவணங்களாக முன்வைக்கப்பட்டு புடம் போடப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதே. இவ்வெற்றிக்கு வாய்ப்பாக அமைந்தமை அக்கால ஆசிரியத்துவத்தின் சிறப்பியல்புகளே. இது ஏனைய மாகாணங்களுக்கும் பொருந்தும். அன்று, ஆசிரியர்களின் தியாகமும் அர்ப்பணிப்பும் பேசுபொருளாகவன்றி திடகாத்திரமாக இருந்தது. கல்விப் பெறுபேறுகளும் அடைவு மட்டமும் உச்சத்திலிருந்தது. பிற்காலத்தில் போர்க்காலம், புலம்பெயர்காலம், ஆக்கிரமிப்புக்காலம், சமாதான காலம் என்ற சாட்டுப்போக்குகள் அடைவுமட்டத்திலும் பரீட்சைப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கும் முன்வைக்கப்பட்டன. இவை அதற்கான ஒரு பகுதிக் காரணமே அன்றித் தொகுதிக்காரணம் அல்ல என்பதே உண்மை. எனவே இவற்றைச் சீர்செய்யும் வகையில் ஒழுங்கான கட்டமைப்பை உருவாக்கல், குழுச்செயற்பாடுகளை நெறிப்படுத்துதல், எல்லாத்துறைகளிலும் சமூக மாற்றத்தை அங்கீகரித்தல், ஊழிய வளங்களிலிருந்து உச்சபயனைப் பெற்றுக்கொள்ளல், இலக்குகள் நோக்கங்களிடையே இணக்கத்தை ஏற்படுத்துதல், பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான பதவியை வழங்குதல், உள்ளக மேற்பார்வையை வலுவுடையதாக்கல் ஆகியன பாடசாலையின் தலைமைத்துவத்தின் தலையாய கடமை என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பாடசாலையின் முகாமையாளர்

பாடசாலையின் பொறுப்புவாய்ந்தவரும் வகைகூறவேண்டியவரும் முகாமையாளரான அதிபரே. பாடசாலையின் வெற்றியும் தோல்வியும் முகாமைத்துவத்திலேயே வேரூன்றி உள்ளது. அதிபர் தனது நாளாந்த பணியில் பாடசாலையை நிர்வகித்தல், பராமரித்தல், ஒழுங்கமைப்பில் கவனம் செலுத்துதல், கட்டுப்படுத்தலில் அக்கறை காட்டுதல், குறுகியகால பொறுப்பேற்றலில் ஆர்வம் காட்டி எதையும் தரமானதாக்குதல் போன்றன பயனுறுதி வாய்ந்த கற்பித்தலுக்கு உந்துசக்தியாக அமையும். எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளையும், விரும்பத்தக்க கற்றல் உத்திகளுக்கு வழிகாட்டுதலையும், தெளிவுபடுத்தும்வகையில் ஆரம்பக் கட்டமைப்பொன்றைத் திட்டமிடுவதன் ஊடாக ஆசிரியர்களை வினைத்திறனுடன் கற்பிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம். தொடர்ந்து கட்டமைப்பின் அம்சங்கள் அமுல்படுத்தப்படுகின்றதா? என்பதை உள்ளக மேற்பார்வையினூடாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மேற்பார்வையின் போது மாணவர்களுக்கு பயிற்சிகள் செய்வதற்கும் கற்றவற்றைப் பிரயோகிப்பதற்குமான மேம்பாட்டை நோக்கமாகக்கொண்ட பின்னூட்டலைப் பெறுவதற்கும் வாய்ப்புகளை வழங்கவேண்டும்.

### வரிசைநிலை முகாமையாளர்

முதற்தர முகாமையாளரான அதிபருக்கு உறுதுணையாளர்களாகச் செயற்படவேண்டியவர்கள் வரிசை நிலை முகாமையாளர்களே (பகுதித் தலைவர்கள்). கடமையில் உறுதி, அர்ப்பணிப்பு இவை இவர்களின் தாரகமந்திரம். பாடசாலையின் கல்விச் செயற்பாட்டையும் வகுப்பறை முகாமைத்துவத்தையும் பங்குபற்றல் முகாமைத்துவத்தின் ஊடாக மேம்பாடடைய வழிசெய்வது, வகுப்பறை மேற்பார்வைகளையும் கண்காணிப்பது இவர்களைச் சார்ந்ததாகும். பாடத்திட்டத்தின் பரீட்சை அடைவுகளில் வெற்றிகாண்பதில் இவர்களின் பங்களிப்பு மிகவும் தேவை. அடிக்கடி ஆசிரியர்களுடன் முரண்பாடற்ற கலந்துரையாடல், ஆரோக்கியமான நல்லுறவு, அடுத்த வரிசையிலுள்ள தர இணைப்பாளர்கள் மற்றும் பாட இணைப்பாளர்கள் ஆகியோரின் நல்லுறவுடன் கூடிய ஒட்டுறவுடன் மேற்பார்வையை வலுவூட்ட வேண்டும். அல்லாது விடத்து ஆசிரியத்துவம் அருகிச்செல்வதற்கான வாய்ப்புண்டு.

### தொழிற்சங்கங்கள்

ஆசிரியர்களின் உரிமைகள், கௌரவம் என்பவற்றிற்கிடையே நிர்வாகத்தினருடன் முரண்பாடுகள் தோன்றுமிடத்து தோள்கொடுக்கவேண்டிய பொறுப்பு தொழிற்சங்கத்தினரைச் சார்ந்தது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதும் உண்மையும்கூட. எனினும் மாணவர்களின் நலநோம்பலில் எல்லாப் பாடசாலைகளுக்கும் சம வாய்ப்பு, கல்விகற்கும் உரிமை என்பவற்றிற்கு இடையூறு ஏற்படும் வகையில் சங்கத்தினர் செயற்படுவதே கவலைக்குரியது.


செல்வாக்குள்ள ஆசிரியர்களுக்கு வசதியான நகர்ப்புறப் பாடசாலைகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் செல்வாக்கில்லாத ஆசிரியர்களுக்கு பின்தங்கிய பிரதேசங்களில் நீண்டகாலம் கடமையாற்ற வழிசமைப்பதிலும் தொழிற்சங்கங்கள் முன்னணி வகிக்கின்றன. நகர்ப் பாடசாலைகளிலும் வசதிவாய்ப்புடன் கூடிய வீதியோரமாக அமைந்துள்ள கிராமப்புறப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர் கதையாக உள்ளது. இந்நிலையில் ஆசிரியத்துவம் அருகிவருவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஆசிரியர்களின் நலனும் மாணவர்களின் நலனும் ஒருநாணயத்தின் இரு பக்கங்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதொன்றல்ல. சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு எதுவித பாதிப்புமற்றோர்க்கு தந்திரோபாய யுத்தியை வழங்கி அவர்களைப் பாதுகாப்பது ஆரோக்கியமானதல்ல. நியமனம்பெற்ற அனைவரும் ஆசிரியர்களே என்பதை அங்கீகரிக்கவேண்டும். இந்நிலை ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தும்.

### வகுப்பறை முகாமையாளர்கள்

ஒரு வகுப்பின் முழுமையான ஆளுகையை நெறிப்படுத்திக் கட்டுக்கோப்புடன் மாணவர் செயற்பாட்டைத் துல்லியமாக்கி அவர்களை நற்பிரஜைகளாக்கும் பொறுப்பு விரும்பியோ விரும்பாமலோ வகுப்பறை முகாமையாளர்களான ஆசிரியர்களைச் சார்ந்ததே. கவர்ச்சியான முறையில் நேர்மனப்பாங்குடன் கற்பித்தல் யுத்திகளை முதன்மைப்படுத்தி செயற்பாடுகளை முன்வைத்தல் வேண்டும். சமகாலங்களில் கற்பித்தல் துணைச்சாதனங்களின் பயன்பாடும் அருகிவருகின்றமை சிலாகிக்கத்தக்கது. அவைகளைத் தயாரிப்பதற்கு போதிய நேரமின்மை முக்கிய குறைபாடாக முன்வைக்கப்படுகின்றது. இதைவிட கல்வி தொடர்பான ஒட்டுமொத்தமான தாக்குதல்களையும் ஆசிரியர்களே தாங்கவேண்டியுள்ளது. பரீட்சை அடைவுகளுக்கேற்படும் வீழ்ச்சி அதிபர் ஆசிரியர்களிலேயே சுமத்தப்படுகின்றது. எனவே நல்லதோர் சமுதாயத்தை உருவாக்குவதும் தொடர்ந்தும் நற்பிரஜைகளை சமுதாயத்திற்கு உருவாக்கிக்கொடுப்பதும் கல்வித்துறை சார்ந்த அனைவரதும் பொறுப்பு. தனித்து அதிபர் ஆசிரியர்களிடம் மட்டும் இதை சுமத்திவிட்டு ஏனையோர் ஒதுங்கிக்கொள்வதும் தப்பித்துக்கொள்வதும் ஆரோக்கியமானதொன்றல்ல. ஆயின் அருகிவரும் ஆசிரியத்துவத்தை பெருகிவரும் ஆசிரியத்துவமாக்கி தடுக்கிவிழும் மாணவர்களை தடுத்து நிறுத்த திடசங்கற்பம் பூணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டைட்டானிக்' என்றுமே அழியாத வடு



ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 15 ஆம் நாளை டைட்டானிக் கப்பல் விபத்து நினைவு தினமாக உலகம் முழுவதும் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஏழரை மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்டு 46,000 தொன்னுக்கும் அதிகமான எடையுள்ள சொகுசுக்கப்பலே டைட்டானிக்.


1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி தனது முதல் பயணத்தைத் தொடர்ந்தது டைட்டானிக். இங்கிலாந்தின் சதாம்ப்டன் துறைமுகத்தில் இருந்து ஃபிரான்ஸ், அயர்லாந்து வழியாக அமெரிக்காவின் நியூயோர்க் நகரை அடைவதுதான் அதன் இலக்கு.

பயணத்தை ஆரம்பித்த சில தினங்களிலேயே அதாவது ஏப்ரல் 14 ஆம் நாள் நள்ளிரவு சரியாக 11.40 மணியளவில் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் பனிப்பாறையில் மோதியது கப்பல். அதனால் ஏற்பட்ட விரிசல் வழியாக கப்பலின் உள்ளே தண்ணீர் புக ஆரம்பித்து சுமார் 2,200 க்கும் அதிகமான பயணிகளுடன் கடலுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கத் தொடங்கியது டைட்டானிக்.

கடலில் தனக்கு அருகில் பயணித்துக்கொண்டிருந்த கப்பல்களிடம் உடனடியாக, உதவி கோரியது. அந்தச் சமயத்தில் சுமார் 93 கடல்மைல் தொலைவில் இருந்த ஆர்.எம்.எஸ். கார்பெத்தியா உதவிக்கு வருவதாக அறிவித்தது. சரியாக ஏப்ரல் 15 ஆம் திகதி அதிகாலை 4.10க்கு அந்த கப்பல் உதவிக்கு வரும்போது டைட்டானிக் கப்பல் 3,700 மீற்றர் ஆழத்தில் மூழ்கிவிட்டது.

### கப்பல் மோதிய பாறை

டைட்டானிக் கப்பல் மோதிய பாறையின் வயது சுமாராக ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கும் மேலானது. இந்தப் பாறை தென்மேற்கு கிரின்லாந்தில் இருந்து தொடங்குகிறது. கப்பல் மோதும் போது பாறை 1.5 மில்லியன் தொன் எடையும், 400 அடி உயரம் கொண்டதாகவும் இருந்தது. ஆனால், இன்று அதன் எடை 75 மில்லியன் தொன்கள், 1,500 அடி உயரமாகவும் இருக்கிறது. கப்பல் மூழ்கிய 1912 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் நிறைய பனிப்பாறைகள் இருந்துள்ளன. அதன் காரணமாகத்தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கின்றது. 'அப்பனிப் பாறைகள் ஒன்றோடு ஒன்று கலந்துதான் இன்று இந்த அளவுக்குப் பெரியதாக மாறியுள்ளன' என்று சமீபத்தில் லண்டன் ஷெபீல்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரண்ட் பிக் என்பவர் டைட்டானிக் கப்பல் மோதிய பாறையைப் பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் அறிக்கைகளில் தெரிவித்துள்ளார்.



### விபத்துக்கான காரணம்

கப்பல் சரியான காலநிலையில் தன் பயணத்தைத் தொடங்கவில்லை என்றும், கப்டனின் அதீத ஆர்வக் கோளாறின் காரணமாகவே கப்பல் பனிப்பாறையில் மோதியது என்றும் பலதரப்பட்ட மக்கள் காரணம் சொல்லிவந்தனர். ஆனால், உண்மையில் விபத்துக்கான காரணம் என்னவென்று இன்றுவரை ஆராய்ச்சிகள் நடைபெற்றுத்தான் வருகின்றன.

விபத்து ஏற்பட்டு கடலில் மூழ்கிய பிறகு எடுக்கப்பட்ட புகைப்படங்களில் கப்பல் இரண்டாக உடைந்த இடத்துக்கு அருகில் மிகப்பெரிய அளவில் கறுப்பு நிற அடையாளங்கள் இருந்துள்ளன. இந்த அடையாளங்கள் கப்பல் நீரில் மூழ்கும்போது ஏற்பட்ட தீ விபத்தினால் உருவானது கிடையாது. வாணிப நோக்கத்துக்காகச் செய்யப்பட்ட இந்தக் கப்பலில் கருமை நிற அடையாளம் பதிந்துள்ள அந்த இடத்தில் எரிபொருள்கள் ஏதும் வைக்கப்படவில்லை. அப்படியிருக்க அந்த இடத்தில் இப்படி ஒரு பிளவு ஏற்பட வாய்ப்பே இல்லை. பயணம் ஆரம்பிப்பதற்கு முன்னாள் ஏற்பட்ட தீ விபத்தால்தான் இந்தப் பகுதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால், இந்தப் பகுதி இரண்டாக உடைந்து மிகப்பெரிய அழிவினை உண்டாக்கியிருக்கிறது. இதுதவிர, இப்படி ஒரு தீ விபத்து ஏற்பட்டதை அந்தக் கப்பலின் உரிமையாளர் பயணிகளிடத்தில் மறைத்துள்ளார். காரணம், சொன்ன நேரத்தில் அந்தக் கப்பல் பயணத்தைத் தொடங்கவேண்டும் என்பதாலும், ஒருவேளை... இதுபற்றி பயணிகளுக்குத் தெரியவந்தால், இவ்வளவு பெரிய பொருட்செலவில் உருவான அந்தக் கப்பலில் யாரும் பயணிக்க மாட்டார்கள் என்பதாலும், அதனால் நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதாலுமே அவர், இந்தத் தீ விபத்தைப் பயணிகளிடமிருந்து மறைத்திருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. 'ஒரு மனிதன் இறப்பதற்குள் பத்தாயிரம் மைல் பயணம் செய்திருக்க வேண்டும்' என்பது புகழ்மிக்க பழமொழி. பல நாடுகள் கண்டு பிடிக்கப்பட்டதற்கும், புதிய நாகரிகங்கள் தோன்றியதற்கும் பயணங்களே முக்கிய காரணமாக அமைந்தன. ஆனால், வரலாற்றின் திசையை மாற்றிய பல பயணங்களில் இழப்பு என்பதும் தவிர்க்கமுடியாதது. இன்று வரை உலகில், பயணங்களினால் எத்தனையோ விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், உலகம் காலம் கடந்தும் நினைவுகளில் வைத்துக்கொள்ளும் சில விபத்துகளில் முக்கியமானது டைட்டானிக் விபத்து.

டைட்டானிக் விபத்துக்கு ஆயிரம் காரணங்கள் சொல்லப்பட்டாலும், வரலாற்றின் எந்த வருடம் சென்று திரும்பி பார்த்தாலும் டைட்டானிக் விபத்து என்றுமே அழியாத வடுவாகும். பனிப்பாறையில் மோதி டைட்டானிக் கப்பல் விபத்துக்குள்ளானதன் 113ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

# பொதுநலனே புனிதமான நோன்பு



"அழுகைக்கும் ஒரு காலம். சிரிப்புக்கு ஒரு காலம். துயரப்படுதலுக்கு ஒரு காலம். மகிழ்வுக்கு ஒரு காலம். பேசுவதற்கு ஒரு காலம். பேசாதிருப்பதற்கு ஒரு காலம்" அவ்வாறே நோன்பிருப்பதற்கும் ஒரு காலம் இருக்கிறது. அக்காலம் இதுவே.

வெறுமனே பல்சுவை உணவுகளை ஒறுப்பதும் ஆடம்பரத்தைத் தவிர்த்து தன்னை ஒடுக்குவதும் ஆலயத்திலும் வழிபாடுகளிலும் இணைந்து கொள்வதும் போன்ற வெளிப்படுத்தல் நிகழ்வுகளில் மட்டும் நோன்பின் மகத்துவமும் புனிதத் தன்மையும் உணரப்படுவதல்ல.


மாறாக கொடுமைதனைகளை அவிழ்ப்பதும் நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும் பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்துகொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்துக்கு அழைத்து வருவதும் உடையற்றோருக்கு உடுக்கக் கொடுப்பதும் அடிமைகளுக்கு உரிமை கொடுப்பதும் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதுமே இறைவன் விரும்பும் நோன்பாகும். (எசா 58:19)

இவ்வகை நோன்புதான் வாழ்வில் விடியலைத் தரும். நலமான வாழ்வுக்கு அழைத்துச் செல்லும். அப்போது உன் நேர்மை உனக்கு முன்செல்லும். இறைவனின் மாட்சி உனக்குப்பின் சென்று காக்கும். உன் குரலுக்கு ஆண்டவர் செவி சாய்ப்பார். எமது நிலையை உணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ள நோன்பு உதவ வேண்டும். பிறருடைய வாழ்வில் சுமை ஏற்றுபவர்கள் அல்லாமல் சுவை ஊட்டுபவர்களாக வாழ முயல்வோம்.

**எஸ்.யேசுதாஸ்,** கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்த்திக்கடனை நிறைவேற்ற சென்ற தூக்குக்காவடி தடம்புரண்டு விபத்து



முல்லைத்தீவு, ஏப். 16

முல்லைத்தீவு குமுழமுனை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கலுக்கு நேர்த்திக்கடன் செய்ய சென்ற தூக்குக்காவடி உழவியந்திர பெட்டி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கி ழமை புத்தாண்டு தினத்தில் நடந்துள்ளது.

இரு இளைஞர்கள் தூக்குக்காவடி நேர்த்திக்கடனை நிறைவேற்ற குமுழமுனை கற்பக பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை தூக்குக்காவடி கட்டப்பட்ட உழவியந்திர பெட்டி திடீரென குடைசாய்ந்ததனால் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் தூக்குக்காவடி எடுத்த இரு இளைஞர்களும் விபத்தில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

# இனப்பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பில் தீர்வு!

## நீதியமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, ஏப். 16

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போது, நாட்டின் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும். அதற்காகவே வடக்கு, கிழக்கு மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.


புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாகவுள்ளோம். இதை நாங்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம். இந்தச் சட்டத்துக்கு எதிராகவே நாங்கள் செயற்பட்டோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்வதற்கும், நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புதிய சட்டத்தை இயற்றுவதற்கும் கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட பணிகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். அவற்றில் நல்ல விடயங்களை எடுத்துக்கொண்டு முன்னோக்கிச் செயற்படுவோம்.

தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புத் தொடர்பான புதிய சட்டம் இயற்றப்படும். நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாகத் தீர்வை வழங்கியே தீருவோம். இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்காகவே வடக்கு, கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரவுக்கு ஆணை வழங்கியுள்ளனர் - என்றார். (ம-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03.12.1946

உதிர்வு 27.04.2024

## அமரர் திரு சின்னத்தம்பி தங்கவடிவேல்

**கண்முன்னே வாழ்ந்த காலம்**
**கனவாகிப் போனாலும்**
**எம் முன்னே உங்கள் முகம்**
**எந்நாளும் உயிர் வாழும்**
**மண் விட்டு மறைந்த நீங்கள்**
**விண்ணோக்கிச் சென்று ஓராண்டுகள்–ஆனாலும்**
**கண்விட்டு மறையாமல்**
**கனகாலம் இருப்பீர்கள் அப்பா**
**உங்கள் ஆத்மா சாந்திக்காக வேண்டுகிறோம்**
**என்றும் குடும்பத்தினர் நாம்.**

மீசாலை கிழக்கு,
மீசாலை

(CS/29051)J-1

# மரண அறிவித்தல்

விராட் விஸ்வப்ரமனே நமக



தோற்றம் 31 . 07 . 1931

மறைவு 15 . 04 . 2025

## தவமணி இராசையா

மூளாயைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட தவமணி இராசையா அவர்கள் நேற்று (15.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராசையா அவர்களின் அன்பு மனைவியும் நாகலட்சுமி, காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் கோபாலகிருஷ்ணன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வேலாயுதம் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - அன்னம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் மற்றும் ஸ்ரீறஞ்சினி, கமலா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிவேதன், நிதுஷா, நிகேஷன், பவிஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2025) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்தில் எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 823 1091

(CS 30043) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழியை அகழ தயக்கம் காட்டுகின்றது அரசு!

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16
செம்மணி மனிதப் புதைகுழியை அகழும் பணிகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தயக்கம் காட்டிவருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா இராணுவத்தினால் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சுமார் அறுநூக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் யாழ்ப்பாணம் செம்மணியில் புதைக்கப்பட்டனர் என்பது ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட விடயமாகும்.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம் பெற்ற காலப்பகுதியில், அதனை மூடி மறைப்பதற்கும் ஆதாரங்களை அழிப்பதற்கும் பல்வேறு முயற்சிகள் அப்போதைய அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதை அனைவரும் அறிவார்கள். அதேபோன்று தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும், செம்மணிப் புதைகுழி விடயத்தில் இழுத்தடிப்பு நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றது. செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அகழ்வுக்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், அந்தக் கடமைகளை அரசாங்கம் தொடர்ச்சியாகத் தட்டிக்கழித்தே வருகின்றது.

மனிதப் புதைகுழி ஒன்றை அகழ்வதற்கு 20 லட்சம் ரூபா என்பது சிறிய தொகை. அதனை வழங்குவதற்கு கூட தற்போதைய அரசாங்கம் அக்கறை செலுத்தாதமை, தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதையும் வெளிப்படுத்துகின்றது. இந்த மனித புதைகுழியை ஆய்வு செய்வதற்காக, தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அமர்த்தப்பட்ட நிலையில் அவரைக்கூட தற்போதைய அரசாங்கம் மாற்றுவதற்கு காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளை தமிழ் மக்கள் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும். போரை நிறுத்த விரும்பாமல், இராணுவத்துக்கு ஆட்களைத் திரட்டிக்கொடுத்தவர்கள், தற்போது பெயரை மாற்றிக்கொண்டு தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தரப் போவதாகக்கூறி சிங்கள ஏகாதிபத்திய செயற்பாடுகளையே அரங்கேற்றுகின்றனர் - என்றார். (ம-இ)

**பணிப் பெண் தேவை**

கல்வியங்காடு நல்லூர் பகுதியில்
அரசாங்க உத்தியோகத்தர்
ஒருவரின் வீட்டில் சிறுவர் பராமரிப்பு
மற்றும் வீட்டு வேலை செய்வதற்கு
பணிப் பெண் தேவை.

தொடர்பு: 076 578 9372

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி 2025 ( கட்டம் 2)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2025.04.16 - 2025.04.29 காலப்பகுதியில் மு.ப 9.00 மணி யிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2025.04.30 திகதி 10.30 மணிக்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2025.04.23 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரு.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/CF / 2025/09 | தொகுதி 1<br>1. சுன்னாகம் உப அலுவலகத்திற்கான வாகன தரிப்பிடம் அமைத்தல்<br>2. பூவோடை இந்து மயானத்திற்கான நுழைவாயில் கதவு அமைத்தல் | 2.30 | 60 | C8 or above (கட்டடம்) | 49 | 17.06.2025 | 23,000.00 | 15.07.2025 வரை |
| 02. | NP/14/41(15)/02/05/CF / 2025/10 | தொகுதி 2<br>1. தோட்டவீதி அமைத்தல், குப்பிளான் தெற்கு (புளியங்கிணத்தடி புன்னாலைக்கட்டுவன் குறுக்கு வீதி)<br>2. புன்னாலைக்கட்டுவன் வடக்கு பிள்ளையார் வீதி உப ஒழுங்கை அமைத்தல் | 2.27 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 17.06.2025 | 23,000.00 | 15.07.2025 வரை |
| 03. | NP/14/41(15)/02/05/CF/ 2025/11 | தொகுதி 3<br>1. காடாகடம்பை முதலாம் குறுக்கு வீதி, குப்பிளான் தெற்கு.<br>2. மணியகாரன் வீதி குறுக்கு வீதி, ஈவினை | 2.41 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 17.06.2025 | 24,500.00 | 15.07.2025 வரை |
| 04. | NP/14/41(15)/02/05/CF/ 2025/12 | கலைமகள் வீதி புனரமைத்தல், ஈவினை | 2.00 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 17.06.2025 | 20,500.00 | 15.07.2025 வரை |
| 05. | NP/14/41(15)/02/05/CF/ 2025/13 | தொகுதி 4<br>1. செல்லத்துரை வீதி 1ம், 2ம் ஒழுங்கை புனரமைத்தல், சுன்னாகம் கிழக்கு<br>2. காளிகோவிலடி வீதி புனரமைத்தல், சுன்னாகம் கிழக்கு | 2.45 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 17.06.2025 | 25,000.00 | 15.07.2025 வரை |
| 06. | NP/14/41(15)/02/05/CF/ 2025/14 | ஈவினை இந்து மயான மதில் அமைத்தல் | 2.90 | 60 | C8 or above (கட்டடம்) | 49 | 17.06.2025 | 30,000.00 | 15.07.2025 வரை |

தலைவர்
பிரதேச பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
2025.04.16.

**மாபிள் தேவை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி-75ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க-100ரூபாய்

தொடர்புகளுக்கு: 077 723 2535

## பொதுக்கூட்ட அறிவித்தல்
## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை
## நோயாளர் நலன்புரிச்சங்கம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும் எதிர்வரும் 17.5.2025 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்தியசாலையின் மகாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் தலைவரும் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியகலாநிதி G.றஜீவ் அவர்களது தலைமையில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

புதிய யாப்பு விதிகளுக்கு அமைவாக தேர்தல் நடைமுறைகள் மூலமாக புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட வுள்ளதால் வேட்பு மனுக்களை நலன்புரிச் சங்க அலுவலகத்தில் பெற்று பூரணப் படுத்தப்பட்ட வேட்பாளர் பத்திரங்களை 2.5.2025ம் திகதிக்கு முன் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக விவரங்களுக்கு நோயாளர் நலன்புரிச் சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

S.V.E.ஜெயக்குமார்
செயலாளர்

வைத்தியகலாநிதி G.றஜீவ்.
தலைவர்

## மணிவிழா வாழ்த்து




யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
**திருமதி இராசறஞ்சிதம் சந்திரசேகரம்**
**B.A - SPL.Trd. Primary, SLTS-1**

சேவைக்காலம்

| | |
|---|---|
| யா/ மந்துவில் றோ.க.த.பாடசாலை | - 27.11.1989 - 10.01.1991 |
| யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை | - 11.01.1991 - 01.02. 1993 |
| கோப்பாய் ஆசிரிய கலாசாலை | - 02.02.1993 - 31.12.1994 |
| யா/கல்வயல் சண்முகானந்த வித்தியாலயம் | - 01.01.1995 - 14.02.2010 |
| யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை | - 15.02.2010 - 22.04.2018 |
| யா / மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | - 23.04.2018-16.04.2025 |

ஆசிரியர் பணியில் 35 வருடம் சேவையாற்றி ஓய்வு பெறும் தாங்கள் நீண்ட ஆயுளோடும் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
யா / மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15 நாவலர் வீதியில் அமைந்துள்ள 328 எனும் ஆதனம் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் கணபதிப்பிள்ளை வள்ளிநாயகி. கணபதிப்பிள்ளை கைம்பெண் மாரிமுத்து என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை மாரிமுத்து என்பவர் யாழ் நொத்தாரிசு செல்லையா சோமசேகரம் முகதாவில் 1983.12.02ம் திகதி 9105ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் நாகேசு பத்மநாதன் பெண் வள்ளிநாயகிக்கு வழங்கியுள்ளார். மேலும் இவ்வாதனம் யாழ்ப்பாண நீதிமன்ற வழக்கு இல P/2452. இல1140 இருந்ததாக உறுதியில் காட்டப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்திற்கு யாழ்ப்பாணம். நாவலர் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை என்பவர். யாழ் நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 2008.08.20 ம் திகதி 1802ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் வழக்கு இல காணி/ 1121ன் தீர்ப்பின்படி தனது காலம் சென்ற சிறியதாயார் கணபதிப்பிள்ளை கைம்பெண் மாரிமுத்துவிற்கு வந்தடைந்த முதுசமும் கடந்த எழுபத்திஐந்து வருடங்களுக்கு மேலாக எமது சொந்தமும் நிந்தமும் தடையற்ற ஆட்சியும் என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம். நாவலர் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை என்பவர் யாழ் நொத்தாரிசு மு.திருநாவுக்கரசு முகதாவில் 2010.05.02 ம் திகதி 2597ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடையாக கோபாலபிள்ளை சுதர்ஜன் என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

மேலும் குறித்த ஆதனத்தில் கோபாலபிள்ளை சுதர்ஜன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என யாழ் நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் 23.02.2022ம் திகதி 1808ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் அற்றோனித்தத்துவக்காரராகிய செல்வராசா லதீபன் மூலம் தனது பெயர் கோபாலப்பிள்ளை சுதர்சன் என வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு வண்ணார்பண்ணை கோவிற்பற்று. வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை J/78 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "குத்தகைத் தோட்டமும் இராசபுலமும் குஞ்சிக்கலட்டியும் இத்தித்தோட்டமும்" நில.பர 2குளி 12.02. இது நிலஅளவையாளர் K.பரமேஸ்வரன் 07.04.2010LD திகதி தஅளந்து தயாரித்த 39/2010ம் இலக்கப்படத்தில் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு இரண்டு குளி பன்னிரண்டு தசம் பூச்சியம் இரண்டுக்குரிய எல்லை

கிழக்கு :- அம்பலவாணர் வீதியும். கதிரவேலு இரத்தினராசாவின் ஆதனமும்

வடக்கு - கதிரவேலு இரத்தினராசாவின் ஆதனமும் நாவலர் வீதியும்

மேற்கு :- சுதாகர் பெண் நாகேஸ்வரியின் ஆதனம்

தெற்கு :- ஆறுமுகம் ஏரம்புவின் ஆதனம்


இதடங்கலும் வீடு. கிணறு. செய்பயிர் வான்பயிர் உட்பட இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது இவ்வாதனத்தை கோபாலப்பிள்ளை சுதர்சன் என்பவர் தமது பெயரை எமது ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கோபாலப்பிள்ளை சுதர்சன் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம்

செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் என்பதுடன் இந்த ஆதனப்பெயா மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்.
யாழ் மாநகரசபை

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 23.08.1932 விண்ணில் : 28.03.2023

## அமரர். கந்தையா தில்லைநாதன்


அன்பாலே எமையாண்டு
அவயத்தே முந்தி வைத்தீர்!
பண்போடு வாழ வைத்தீர்
பரவுகிறோம் உமைப் போற்றி!
சிவபூதன் இணையடியில்
சாந்தி பெறப் பிரார்த்திக்கிறோம்.

சுன்னாகம் கிழக்கு. குடும்பத்தினர்

(CS 30644) V-1

# மரண அறிவித்தல்

## கந்தையா மாணிக்கம் ( மாணி )



பிறப்பு 17.01.1945 இறப்பு 14.04.2025

ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் மட்டுவிலில் வசித்தவரும் ஆனைப்பந்தியை தற்போது வசிப்பிடமாவும் கொண்ட கந்தையா மாணிக்கம் திங்கட்கிழமை (14.04.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா கண்ணம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் , காலஞ் சென்ற புனிதவதி அவர்களின் அன்புக் கணவரும் , காலஞ்சென்றவர்களான குமாரசாமி , பகவதி, புவனேஸ்வரி, குணரத்தினம், நவமணி, கண்மணி , தையல்நாயகி , நவரட்ணம் , நடராஜா மற்றும் திலகவதி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கஜீபன் (அதிபர்-பரந்தன் அ.த.க.பாடசாலை) ,குலதீபன் (அவுஸ்ரேலியா), டக்சினி, துஜீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஹௌசிகா (ஆசிரியர் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) சியானுஹா (அவுஸ்ரேலியா) , சுஜேஸ்மன் (கனடா), சுதர்சிஹா (லண்டன்) , ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜானன், சஞ்ஜெய், கவிஷ் , கிருத்திக்ஹா, ஆதிஸ்ஹா, அதர்வன், ஆருஷ்மிஹா, பிறையாளன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அழகம்மா, தங்கரத்தினம், தவமணி மற்றும் திரவியம், செல்வரத்தினம், பூபதி, அனுசியாவதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2025) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

320/2, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 526 9373 , 021 222 0095

(CS 1895) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது

## விமான நிலையத்தில் மூவர் கைது

கொழும்பு, ஏப்.16
நான்கரை கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இலங்கையர்கள் மூவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். பாங்கொக்கில் இருந்து இலங்கைக்கு வந்தபோதே இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் பயணப் பொதிகளுக்குள் இருந்த உணவு பதார்த்தங்கள் அடங்கிய பக்கற்றுகளுக்குள் போதைப் பொருள்களை மறைத்து எடுத்துவந்தனர் என்றும், ஆயித்து 616 கிராம் குஷ் மற்றும் ஆயிரத்து 762 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்களை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# இனப்பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பில் தீர்வு!

## நீதியமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, ஏப். 16
புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போது, நாட்டின் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும். அதற்காகவே வடக்கு, கிழக்கு மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாகவுள்ளோம். இதை நாங்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம். இந்தச் சட்டத்துக்கு எதிராகவே நாங்கள் செயற்பட்டோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்வதற்கும், நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புதிய சட்டத்தை இயற்றுவதற்கும் கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட பணிகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். அவற்றில் நல்ல விடயங்களை எடுத்துக் கொண்டு முன்னோக்கிச் செயற்படுவோம்.

தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு பாதுகாப்புத் தொடர்பான புதிய சட்டம் இயற்றப்படும். நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாகத் தீர்வை வழங்கியே தீருவோம். இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்காகவே வடக்கு, கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரவுக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்றார். (ம-இ)



### குருநகர்ப்...

அந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. துப்பாக்கி உக்கிய நிலையில் காணப்படுகின்றது என்றும், அதனுடன் சில தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

### அரச...

குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் காரணமின்றித் தாக்குதல் நடத்தி, தன்னைக் கைவிலங்கிட்டனர் என்று அந்த இளைஞர் முறைப்பாடு வழங்கியிருந்தார். அந்த முறைப்பாட்டுக்கு அமையவே, எதிர்வரும் 21ஆம் திகதியன்று விசாரணைக்கு வருமாறு பொலிஸார் இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-125-113-214)

### இந்திய...

களில் எந்த ஒளிவுமறைவுக்கும் இடமில்லை. ஆதலால், அனைத்து விடயங்களையும் நாடாளுமன்றத்தின் கவனத்துக்காகச் சமர்ப்பித்துள்ளோம். எனவே, இந்தியாவுடன் அரசாங்கம் எந்த திரைமறைவு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அமெரிக்கா விதித்துள்ள வரிகள், உலக நாடுகளுக்குப் பொதுவானவையாகவே காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை நாங்கள், ஆடைகளை அதிகளவில் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். அமெரிக்காவின் வரி விதிப்புகள் தொடர்ந்து, அதனால் எவருக்கேனும் வேலையிழப்புகள் ஏற்பட்டால், அந்த விடயம் தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்துவோம். அத்துடன், உரிய தீர்வுகளும் வழங்கப்படும்-என்றார். (அ-ம-இ)

### மோட்டார்...

வவுனியா நகரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார்சைக்கிளுடன், எதிர்த்திசையில் வந்த மற்றொரு மோட்டார்சைக்கிள் மோதியதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது. இரண்டு பெண்கள், ஒரு இளைஞர் உட்பட மூவரே காயமடைந்துள்ளனர்.

வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110)

### அன்னை...

சமாதியில் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் குறித்த நினைவேந்தலை முன்னிட்டு மூவர் நோர்வே நாட்டிலிருந்து தனது தாயாரின் பெயரைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்று நினைவேந்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். ஊர்வலங்கள், விளையாட்டுப் போட்டிகள், பேரணிகளையும் முன்னெடுக்கவுள்ளனர்.

அமைதியாகச் செய்யவேண்டிய இந்த நினைவேந்தலை இந்த மூவரும் அரசியலாக்கி இலாபமடையவுள்ளனர். இவ்வாறு செய்வதை நான் விரும்பவில்லை. ஆகவே இந்த 3 பேரின் செயற்பாட்டைத் தடுத்துநிறுத்தவேண்டும் என்றவாறாக அவர் தனது முறைப்பாட்டில் பதிவுசெய்துள்ளார். (அ-ம-இ)

### துணவி...

தெரிவித்ததாவது:-
2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கர்பக்கிரகம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் ஆகியன தொல்லியல் ஆய்வியல் முறைப்படி சீரமைக்கப்பட்டு வருகின்றது. பணிகள் சீரான வேகத்தில் சென்றுகொண்டிருக்கின்றன. ஜூன் மாதமளவில் ஆலயத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பணிகள் அனைத்தும் முழுமைபெறும் என்றனர். (அ-ம-125)

### விடுவிக்கப்பட் ...

பொதுமக்களுக்கு காணி உரிமம் வழங்கும் 'உறுமய' வேலைத்திட்டம் யாழ்ப்பாணம் ஒட்டகப்புலம் பகுதியில் கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்றது. இந்தத் திட்டத்தின் கீழ், 408 பேருக்கு 235 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பலாலி வடக்கு ஜே/254, பலாலி கிழக்கு ஜே/253, பலாலி தெற்கு ஜே/252, வயாவிளான் கிழக்கு ஜே/244, வயாவிளான் மேற்கு ஜே/245 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தொடர்புடைய காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும் இராணுவத்தினரின் பாதுகாப்பு நெருக்கடிகள் மிகவும் அதிகரித்துள்ளன என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தக் காணிகள் மக்களால் முற்றுமுழுதாகப் பயன்படுத்தவேண்டுமாயின், இராணுவ முகாமின் எல்லையை நகர்த்த வேண்டியிருந்தது. இதற்காக அண்ணளவாக 18 மில்லியன் ரூபா தேவை என்று இராணுவத்தால் மதிப்பிடப்பட்டிருந்த நிலையில், அந்தத் தொகை வழங்கப்படாமையால் இராணுவ முகாமின் எல்லை அதே இடத்திலேயே தொடர்ந்தும் நிலைபெற்றுள்ளது.

இராணுவத்தின் பாதுகாப்பு வேலிகள் நகர்த்தப்படாத காரணத்தால், பொதுமக்கள் பிரதான வீதிக்குப் போக்குவரத்துச் செய்வதற்கு பெருமளவுதூரம் சுற்றிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், மாலை நேரத்துக்கு முன்னரே பொதுமக்கள் தமது நிலப்பகுதிகளை விட்டு வெளியேற்றப்படுவதாகவும், விவசாய நிலங்களில் தமது பாதுகாப்புக்காக தற்காலிகக் கொட்டகைகளைக்கூட அமைக்கமுடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

'காணிகள் விவசாய நடவடிக்கைக்காகவே விடுவிக்கப்படுகின்றன. பொதுமக்களுக்கு ஒத்தாசையாக இராணுவத்தினரும் செயற்படுவார்கள்' என்ற அறிவுறுத்தலுக்கு அமையவே காணிகள் விடுவிக்கப்பட்டன. ஆதலால், இந்தக் காணி விடுவிப்பு, ஒரு முழுமையான நடவடிக்கை அல்ல என்று அன்றையதினமே பல தரப்பினரும் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### மருதடி...

இதில் கலந்துகொள்வதற்காக இளவாலை மற்றும் சண்டிலிப்பாய் பகுதிகளில் இருந்து சென்ற இருவரின் சங்கிலிகளே காணாமற்போயுள்ளன. இரண்டு சங்கிலிகளுமாகச் சேர்த்து ஒரு பவுண் நிறையுடையவை என்றும் தெரியவருகின்றது. மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

### உடற்பருமன்...

நாசினியை அருந்தியுள்ளார். இதையடுத்து, ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்தார்.

வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

### தவறான...

மாக, கடந்த எட்டாம் திகதி தவறான முடிவெடுத்து கிருமிநாசினியை அருந்தியுள்ளார். மறுநாளே தான் கிருமிநாசினியை அருந்திய விடயத்தை வீட்டாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து, முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மருத்துவமனையில் பிணவறை குளிரூட்டி பழுது

## மருத்துவமனை நிர்வாகம் அலட்சியம்

வவுனியா,ஏப்.16

வவுனியா மருத்துவமனையின் பிண அறையின் குளிரூட்டி கடந்த இருவாரங்களாகப் பழுதடைந்துள்ள நிலையில் அதனைச் சீரமைப்பதில் மருத்துவமனை நிர்வாகம் அலட்சியமாக இருப்பதாக மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குளிரூட்டி இயங்காமையினால் வவுனியாவில் உயிரிழப்பவர்களின் சடலங்கள் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனைக்குத் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டுவருகின்றன. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். குளிரூட்டியைத் திருத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் அது வெற்றியளிக்கவில்லை என மருத்துவமனை நிர்வாகத்தால் தெரிவிக்கப்படுகின்றது - என்றனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வவுனியாவில் நீச்சல்குளம் ஒன்றில் வீழ்ந்து உயிரிழந்த இளைஞரின் சடலத்தை செட்டிகுளம் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லுமாறும், மறுநாள் காலை மீண்டும் அங்கிருந்து வவுனியா மருத்துவமனைக்கு சடலத்தை எடுத்துவந்து சட்டவைத்திய பரிசோதனைகளை முன்னெடுக்குமாறும் அதற்கான செலவை உயிரிழந்தவரின் உறவினர்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சம்பவ இடத்துக்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் மருத்துவமனை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடியதையடுத்து உயிரிழந்தவரின் சடலத்தை மருத்துவமனை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 110)

# நவாலியில் மோட்டர் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 16

நவாலி அரசடிப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயமொன்றில் மோட்டர் திருட்டுப் போயுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)


# வடக்கின் புத்தாண்டு விழா யாழ்ப்பாணத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 16

வட மாகாணக் கல்வி , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய விளையாட்டுத்திணைக்களம், சுற்றுலாப் பணியகம் மற்றும் வலிகாமம் தெற்குப் பிரதேச சபை என்பனவற்றின் இணை ஏற்பாட்டில், மாபெரும் வடமாகாண சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் யாழ்.சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் சிறப்பு விருந்தினராகவும், வட மாகாணச் சுற்றுலாப் பணியகத் தலைவர் அ.பத்திநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 66,28)





வரலாற்றுச்சிறப்புமிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பல்லாயிரம் அடியவர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ச)

## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

சமையலாளர் - 100 000/-

உணவு பரிமாறுபவர் - 30000/-

ரொட்டி போடுபவர்

தொடர்பு:- 077 779 5404

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் VS Garment தொழிற்சாலை (T-shirt printing) ஒன்றிற்கு பின்வரும்வேலையாட்கள் தேவை.

1.வரவேற்பாளர் 2.தையல் தெரிந்தவர்களும் தையல் பழக விரும்புவோரும் விரும்பத்தக்கது

தொடர்பு:- 076 565 6534

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.16

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, இன்பர்சிட்டி காண்டீ பன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன.

கிறிஸ் கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல், ஆண்கள், பெண்களுக்கான மெதுவான மிதிவண்டி ஓட்டம், பெண்களுக்கான தேங்காய் துருவுதல், சமநிலை ஓட்டம் உள்ளிட்ட விளையாட்டுகளில் அந்தப்பிரதேசத்தின் இளைஞர், யுவதிகள் உள்ளிட்டோர் ஆர்வமுடன் பங்கேற்றனர். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,100)





## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 06 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
  - ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000,00)
  - ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000,00)
  - ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000,00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- கரவெட்டி பிரதேசசபை 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

தொடர்பு: 076 860 2770 / 076 987 8617 / 076 935 3971

(CS/2926) V-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல 36 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org